அரசினர் தாபாலில் பதிவுபெற்றது

உ
சிவமயம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ    அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.    தொலைபேசி: 356

புத்-அசு]   யாழ்ப்பாணம்: ஆனந்த ஸு மார்கழிமீ கஉ-உ வெள்ளிக்கிழமை (27-12-1974)   [இல: சரு

# சிதம்பர நடராஜ தரிசன இரகசியம்

( சித்தாந்தபானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் )



மனித சரீரத்திலே, இருதய குகையின் கண்,

"உமாசகாயம் பரமேசுவரம் விபும் திரிலோசனம்
நீலகண்டம் பிரசாந்தம்
சமஸ்த ஸாக்ஷிம் தமஸः பரஸ்தாத்"

என்று கூறப்பட்டவாறு சிவபெருமானை உபாசித்தல் "தஹரவித்தை" எனப்படும். இவ்வாறு பிண்டமாகிய சரீரத்தில் இதயாகாசத்தில் தியானிக்கப்படுவதுபோல அண்டமாகிய உலகத்திலும் சிதம்பராலயத்தை இருதய குகையாகக் கொண்டு ஆதிசக்தியாகிய பரமவியோமம் எனப்படும் இரகசிய ஆகாசத்தில் சிவபிரானைத் தியானித்தல் பெருந்தவத்தோராகிய பதஞ்சலி மகாமுனிவர், வியாக்கிரபாதர், திருமூலர் என்னும் பெரியார்களாலே சிவாநுக்கிரகம் கொண்டு கண்டுபிடிக்கப்பட்டு, வழிவழியாக ஆனந்த நடராஜரை "சாந்தி அதீத, அத்துவாதீத பரமாகாய துரியமூர்த்தியாக வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

நிஷ்கள வடிவாகிய சிதம்பர நடராஜ மூர்த்திக்கும், ஏனைய கோயில்களில் பிரதிஷ்டை செய்து வழிபடப்பெறும் இருபத்தைந்து மஹேசுவர வடிவங்களைச் சேர்ந்த சபாபதி எனப்படும் சகளமூர்த்திக்கும் வேறுபாடுகள் மிகவும் உண்டாம்.

இந்தச் சிதம்பர நடராஜ மூர்த்தியைக் கன்மயாகம், தபயாகம், ஜபயாகம் என்னும் மூன்றிற்கும் மேலாகிய ஞானயாகம் எனப்படும் ஞான தியான வாயிலாகவே தரிசித்து ஜீவன் முத்தியை அடையலாம். இதனை உமாபதிசிவாசாரியர் தாமியற்றிய கோயிற் புராணத்தின்கண் ஸ்ரீமத். நடராஜ மூர்த்தியின் திருவாக்காக,

"நாம், உறைந்திடும் தில்லை ஞானயோகமார் தானமாமாற், செறிந்தடி காணச் சீவன்முத்தராய்த் திரியலாமே" எனக் கூறியருளினர்.

உலகில் உள்ள எல்லா ஆலயங்களிலும் இருக்கும் தெய்வ கலைகளெல்லாம் அர்த்த யாமத்தில் சிதம்பர நடராஜ மூர்த்தியில் ஒடுங்கி உதய காலத்து அவ்வவ் விடங்களிலே சாந்நித்தியமாவதாம் என ஆன்றோர் கூறுவர்.

காரணாகமத்தில், சப்த தாண்டவ படலத்தில் சிவனது எழுவகைத் தாண்டவங்கள் கூறப்படுகின்றன அவையாவன:

(1) ஆனந்த தாண்டவம்:— சிவபரம்பொருளின் மூவகை (ஆனந்த) நிலையில் அமைவது.

அவை: நிஷ்களமாகிய சிவம் (அருவம்)
சகளநிஷ்களமாகிய சதாசிவம் (அருஉரு)

சகளமாகிய மஹேசுவர உருவங்கள்

சிதம்பர நடராஜ தாண்டவம் மூவகை நிலையில் முதலாவதாம்.

(2) சந்தியா தாண்டவம்:— பிரதோஷகால நடனம்.

(3) கௌரீ தாண்டவம்:— லோகாநுக்கிரகத்திற்காக உமையோடு கூடிய மங்கள வடிவாய் விளங்குவது

(4) திரிபுரதாண்டவம்: திரிபுரதகன முடிவில் ஆடிய "கொடுகொட்டி" எனும் நடனம்.

(5) காளீ தாண்டவம். காளியோடு ஆடியது (ஊர்த்துவ தாண்டவம)

(6) முனி தாண்டவம்: தாருகாவனத்து இருடிகளுக்கு உண்மைஞானம் தோற்றுவித்தற் பொருட்டு ஆடியது.

(7) சம்மார தாண்டவம்:- ஊழிக்காலதாண்டவம் (காலசம்மார மூர்த்தி முதலியனவும் இதனுள் அடங்கும்)

"மஹேசுவர மஹாகல்ப மஹாதாண்டவ ஸாக்ஷிணீ" என்னும் லலிதா சஹஸ்ர நாமமும் சம்மார தாண்டவத்தைக் குறிக்கிறது.

மேலே கூறிய இந்த எழுவகைத் தாண்டவங்களுள் உமையுடன் கூடிய வடிவமாகிய கௌரீ தாண்டவ மூர்த்தியே கோவில்களில் பிரதிஷ்டை செய்யத் தகுந்தது. அங்ஙனம் பிரதிஷ்டை செய்த கௌரீ தாண்டவ மூர்த்திக்குக் கல்யாண மகோற்சவம் நடாத்துவதால்.

"விஜயம் ஸ்ரீகரம் புண்யம்
மாங்கல்யம் மங்கலம் சுபம்।
கீர்த்திர் ஆயுஷ்ய
புத்திரார்த்தம் கல்யாணம்
சைவ காரயேத்॥

என்னும் சுலோகத்தில் குறிப்பிட்ட பலன்களைப் பெறலாம்.

சிதம்பர நடராஜமூர்த்தி மோக்ஷப் பிரதான தேவ

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

யாழ் வளாகத்தில்

## சாசனவியற் கருத்தரங்கு

யாழ். புதைபொருள் ஆராய்ச்சிக் கழகம் நிறுவுகின்ற இந்தச் சாசனவியற் கருத்தரங்கு 4, 5-1-75 திகதிகளிலே யாழ் வளாகத்தில் நடைபெறும். வெளிநாட்டிலிருந்து பல அறிஞர்கள் பங்குபற்றுவார்கள்.

# ஐயடிகள்காடவர்கோன் நாயனர்

வித்துவான் க. வெள்ளைவாரணர் M. A.
( அண்ணாமலைப் பல்கலைக் கழகம் )

இவர் திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்ற சிவனடியார்களுள் ஒருவர். பல்லவர் குடியிற் பிறந்தவர். காடவர் என்பது பல்லவர்க்குரியபெயர் காடவர் குலத்தில் தோன்றிக் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு தொண்டை நாட்டையாண்ட வேந்தர் பெருமானாகிய இவர், அரசியல் வாழ்வு துன்பந்தருவதெனவுணர்ந்து அரசுரிமையைத் தன் புதல்வன் பால் ஒப்புவித்து விட்டுப் பற்றற்ற சிந்தையாய்ச் சிவதொண்டு புரிந்துவாழ்ந்தமையால் ஐயன் அடிகள் என அழைக்கப்பெற்றார். ஐயன் அடிகள் என்பதே ஐயடிகள் என்றுமருவியது என்பர்.

அறிஞர் ஆட்சியில் ஈடுபட்டுள்ள மன்னன் தன் தந்தையை ஐயன் என்று குறிப்பிடும் வழக்கம் பல்லவர் சோழர் கல்வெட்டுக்களிற் காணப்படுகிறது. அடிகள் என்றது துறவுடைப் பெரியோரைக் குறிப்பதாகும் காடவர்கோனாகிய இப்பல்லவவேந்தர், அரசாட்சி தம்முடைய தொண்டுக்குத் தடையாவதெனவுணர்ந்து அப்பொறுப்பினைத் தம் மைந்தன் பால் ஒப்படைத்து நெடுநாள் சிவதொண்டு புரிந்திருந்து இறைவன் எழுந்தருளிய தில்லையம்பலம் முதலிய திருத்தலங்களைப் பணிந்து ஒவ்வொரு வெண்பாவினற் பாடிப்பரவினர் என்பதும் அவர் திருத்தலங்களைப் பாடிப் போற்றிய வெண்பாவின் தொகுதியே பதினோராந் திருமுறையிலுள்ள க்ஷேத்திரத் திருவெண்பா என்பதும் சிவநெறிச் செல்வர் பலரும் அறிந்த வரலாறுகும்.

க்ஷேத்திரத்திருவெண்பா அருளிய காடவர்கோன் நாயனர், இராசசிம்மபல்லவனுடைய தந்தையாகிய முதலாம் பரமேசுரவர்மன்னன் என்பதும், கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்' எனத் திருத்தொண்டத் தொகையிற்போற்றப்பெற்ற வேந்தர் பெருமானாகிய இராசசிம்மபல்லவனே ஐயடிகளுடைய மைந்தன் என்பதும் 'காடவர்கோன் கழற்சிங்கன்' எனச் சுந்தரர் கூறுதலால் இனிது விளங்கும். காடவர்கோன் மைந்தன் கழற்சிங்கன் என்பார்,

வளர்ச்சி 4-ம் பக்கம்

# திருவாசகவிழா-திருவெம்பாவை

திருக்கேதீஸ்வரத்தில்

வழமை போலத் திருக்கேதீச்சர திருவாசக மடத்திலே ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் திரு. சரவணமுத்துச் சாமியார் அவர்கள் முயற்சியினால் திருவாசக விழா நன்கு அமைக்கப் பெற்றிருக்கின்றது.

இவ்விழாவில் திருச்சியைச் சேர்ந்த திருமுறைக் கலைஞர் வித்துவான் சி. பட்டுச்சாமி ஓதுவார் எழுதியுள்ள ஈழத்துத் திருக்கேதீச்சரம்கோயில் வரலாறு என்னும் நூலை திரு. க. கனகராசா அவர்கள் வெளியிட்டு வைப்பார்கள்.

ஈழத்துச் சிதம்பரத்தில்

ஈழத்துச் சிதம்பரத்திலும் என்றும் போல இவ்விழா இனிது நடைபெறும்.

ஊர்காவற்றுறை நீதிபதி திரு. க. வே. நவரத்தினம், சைவ பரிபாலன சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் சட்டத்தரணி; திரு. செ. இராசையா இவர்களின் தலைமையில்; புதன், வியாழன், வெள்ளி நாட்களில்; பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனார் அவர்கள் —

( முன் வளர்ச்சி — 21 )

"இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெய்வமே"

என்பதோ கருவையான் கண்டிலேன்] கண்கண்ட தெய்வமே என்பதோ ஓதற்பாலதென்பதனைத் துணியலாகாது; இரண்டும் பொருந்துமாகலின்,

இதுகாறுங் கூறிப் போந்தவாற்றாற் கல்லாய் மனிதராய் எனவோதல் பின்றானை ஓதைமயக்கமாதல் கூடுமென்பது பெறப்படும்.

இனிப்புல்லு முதலாயினவற்றை விதந்து கூறுது வாளா கூறுதல் போலக் கல்லாமனிதரென மாந்தரை விதந்து கூறுதல் அடிகளது கருத்தன்றாதலிற் கல்லாயென்பதே கருத்தாதல் வேண்டும் போலுமென்றலுமமையாது வல்லசுரரென சுரரையும் அசுரரையும் விதந்து கூறுதலினென்க:

கல்லா மாந்தர் பிறப்பினும் பேய்ப்பிறப்புயர்ந்ததாககலின் அவர்க்குப் பின் அடுக்கப்பேயை வைத்தார். பேய் பிறர்சொற் கேளாது தானே வாளா சொல்லிக் கொண்டிருக்குமாயினும் மறைமொழி நவின்று வணங்கப்படும். கல்லா மாந்தர் சிறையானன்றி வளர்க்கப்படாமையின் அவரிற் பேயாந்தாதல் காண்க. பேய்களினுங் கூளிகள் உயர்ந்தன, அவை கூறுமற் குறித்ததன் மேற் சொல்லுமாதலானுங் பிஞ்ஞகன் கொற்றவை, குழகன் முதலாயவர்க்குக் கூளிக்குழாம் குற்றேவற் குழாமாதலானும் அவற்றினுயர்வு காணப்படும்.

வல்லசுர ரென்பது வல்லசுரரெனவும் வல் அசுரரெனவும் இருட்டுற மொழிதலான் இருபொருள்பட்டது: சுரர் - இமையவர். அவ்விரு சாராருந் தம்மினுறழ்ந்து பொருவராகலின் அவ்விரு சாரார்க்கும் அடைபொதுவாயிற்று.

வல்லசுரர், தீயவவுணருமாம் அவுணரினுமுனிவரும் அவரினுங் கடவுளருமுயர்ந்தார்;

முனிவரென்றது ஈண்டுமாந்தர் முதலாயவருட் காணப்படும் முனிவரையன்று. அவரது பிறப்பெனத் தனிப்பிறப்பில்லை. அதனால் அவராவார் துறக்கவுலகினும் முயர்ந்ததவவுலகினுந் துறவுலகினுமுள்ளார். அவ்விரு சாராருள்ளும் ஈண்டுத் தவவுலகினுள்ளாரையே கொளல்வேண்டும்; அவரே மீளப்பிறப்பர்; துறவுலகினுள்ளார் மீண்டுபிறவார். ஆண்டே மெய்யுணர்வு தோன்றி அவாவற்று வீடெய்துவர்.

முனிவர்க்கு மேலாய தேவரென்றது துறக்கத்தில் வாழுமிமையவரையன்று துறவுலகில் வாழ பிறைவரையென்க. அவருள் மீளப்பிறப்பாருமுளர், பிறவாதாருமுளர். படைப்புக் கடவுளார் முதலாயினர் வீடெய்தற் பொருட்டு மீளப்பிறப்பர். எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தலாவது அவ்வளவு பிறப்பும் நிலையாதனவுந் துன்பமுமாதலை யெண்ணியுவர்த்தல். இதனை இருவினையொப்பென வழங்கும். இருவினையொப்பினைத் தொடர்ந்து மருட்பெயர்ச்சியும் அருள்வீழ்ச்சியுமொருங்குளவாமென்பவும் அவையுண்டாயவழி இறைவன் அருள் வீறுகோளாசிரியாகிய எதிர்ப்படுமெனவுங் கொள்க.

அவ்வழக்குத் தோன்ற எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்த யான் மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேனென்றது காண்க.

இளைத்தேன்: வினையாலனையும் பெயர் இளைத்தேன் கண்டு வீடுற்றேனென முடிக்க. இனி மெய்யாகவே உன்பொன்னடி வீடுற்றேனனினுமமையும்.

இப்பொழுது முன்போலப் பொன்னடியை நினைவில் அமைத்துக்கொண்டு நோக்குதலில்லையாகலின் மெய்யாகவே உன் பொன்னடியை என்னுயிரிற் கண்டென்றாரென்க.

ஈண்டுப் பொன்னென்பதனைக் காதற்சொல்லாகக் கொள்ளுதலேயன்றிப் பொன்போலத் தேடிப்பெறுதிந்து போற்றுமடியென உவமமாக்குதலுமொன்று.

ஒருவர்க்கு வீடு தம்முடல் வாழ்வுழியும் பெறற்பாலதாகலின் வீடுற்றேனென்றார்.

**உய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற**

**மெய்யா ! விமலா ! விடைப்பாகா ! வேதங்கள்**

**ஐயா ! வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே!**

உரை:

வீடுற்ற யான் பழைய வினைப்பயிற்சிச் சுவடு பற்றிப்பெற்ற வீட்டிற் பெயர்தலுறுவுழி அக்கேட்டினிறப்புதற் பொருட்டு என் ஒடுங்கியவுள்ளத்தில் ஓமென்னும் ஓரெழுத்து மறையாய் நிலைபெற்றிருந்த பிழம்புடையவனே !

மெய்யா ! உண்மையளவாயுள்ளானே ! யென்றுமாம். உய்தற் பொருட்டான் ஓமென ஓவாதுள்ளுதல் வீடுபேறு காத்தற்கும் புலனைநோக்குமுள்ளத்தை மீட்டற்கு முறுதுணையென்ப;

உலகெலாம் பொய்யெனவுணர்தலும் உலகெலாமிறைவனெழிலெனவுணர்தலும் உய்தற்குறுதுணையாகலின் ஓமென ஓவாதுள்ளுதல் சிறப்புடைத்தென அதனை யெடுத்தோதினார்.

விமலா ! உடம்பு முள்ளமுமுயிரும் பளிங்குபோல இயல்பாகவே அழுக்கடையாத தூயோனே!

விடைப்பாகா ! : ஏற்றூர்தியே ! அறத்திற்கு ஆனேற்றுக்கோலந்தந்து வழங்குப; அமணரும்.

வேதங்கள் : மெய்ப்பொருண்மேற்கூறு மெய்ப்பனுவ லுலகம், கள் : அசைச் சொல்; இசை நிறையுமாம்: வேதம் இறைமாண்பு முற்றக் கூறலாற்றாமையின் இறுதியில் ஐயா ! எனக் கூவிச் சோர்ந்து வாய்வாளாது நின்றொழியுமாற்றானென்க;

ஓங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே ! :

வரம்பின்றி மேலுயர்ந்தும், வரம்பின்றிக் கீழாழ்ந்தும் மருங்கெலாமில்லையாக வரம்பின்றி விரிந்தும் தன்னை உள்ளடக்குவதூஉந் தீண்டுவதூஉமொன்றில்லாதவாறு நுணுகியு மிருப்பவனே!

வெய்யாய் : வெய்யோனே ! தணியாய் தண்ணியோனே! வெய்யோன், ஞாயிறு. தண்ணியோன், திங்கள்.

( வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## " ஊடுவதுன்னோடுவப்பது முன்னை "

( திரு. சே. சின்னத்துரை ஏழாலை, சுன்னாகம் )

(முன் வளர்ச்சி – 2)

மக்கள், குலம், கல்வி என்ற சித்த விகாரத்தில் உழன்றும் நாம் அலைகிறோம். ஊனாகியும், உயிராகியும் இமைப்பொழுதும் நீங்காமலும் என்றும் உறவாகியுமுள்ள இறைவன் திருப்பாதமே உண்மைச் செல்வம். "செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" என்றார் ஞானசம்பந்தப் பெருமான். ஊர், உற்றார், பெற்றார் பெறற பெயர் பெண்டிர், பிள்ளைகள் ஆகிய யாவும் சதமல்ல. பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபிரானே பெரியவர். அவரை நாம சரண் அடைய வேண்டும்.

பொன்னாலாகிய ஆபரணம், ஆடை, மாலை முதலியவற்றை அணியும் உடம்பும் அவையும் வெவ்வேறு பொருட்கள் ஆபரணம் வேறு பொருள் உடல் அத்தன்மை போல் உடலும் உயிரும் வேறு என்று உணர்ந்து சிவரூபமான உடம்பை இறைவன் எமக்குத் தந்தது மலப் பிணிப்பை வேறுறச்செய்து வீட்டின் பத்தை நல்குவதற்கே இந்திரசாலக் கோலமான இப்பிரபஞ்ச வாழ்வை எமக்கு இறைவன் ஈந்தது இந்த ஊனநடன நாடகத்தை முடித்து முழுஞான நடனத்தை வருவித்து விடுதலை அடையச் செய்வதற்கு என்பதே உயர்ந்த உண்மை

உலகவாழ்க்கையைப் பற்றற்ற நிலையிலிருந்து வாழ நாம் எம் மனதை பழக்கி எடுக்கவேண்டும். கடமைகளை நாம் தவறாது செய்ய வேண்டும். பலனைக் கருதாமல் நிஷ்காமியமாக நாம் கடமையை ஆற்ற வேண்டும் இந்தவகையில் இல்லறஞானிகளாக விளங்கிய பெரியபுராணத்தில் பேசப்படும் பற்பல பெரியோர் வாழ்ந்து காட்டினர். அவர்கள் கலங்கரை விளக்குப்போல் விளங்குகிறார்கள், நாம் நினைப்பன சொல்வன பேசுவன எல்லாம் சிவ அர்ப்பணமாகச் செய்து வந்தால் மலத்தின் வன்மை கெட்டொழியும், யான் எனது என்னும் அகங்காரமமகாரங்கள் ஞான எரியால் வறுத்த வித்துப் போலாகிவிடும். பிரார்த்த வினையின் தாக்கமிராது ஆகாமிய வினையும் ஏறாது.

" இருவினைச் செயல்கள் ஒப்பின் ஈசன் தன் சத்தி தோய குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத் திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறிவொழிந்து ஞானம் பெருகிய நாயக தன் பாதம் பெறுவது சுத்தமாமே" என்பது சிவஞான சித்தியாரில் கூறப்படும் அமுதவாக்கு. எம் பெருமான் திருநாமமே எம்மைப் பிறவிக்கடலில் நின்று தூக்கி அருட்கடலில் சேர்க்கும் தெப்பம் என்பது பெரிய உண்மை. எம்பெருமானே எமக்கு ஈன்றாளுமாயும் எமக்கு எந்தையுமாயும் உடன் தோன்றினராயும் தோன்றாத் துணையாயுமிருந்து, எமக்கு எண்ணற்ற வழிகளில் உபகரிக்கிறாரென்றும் நாம் நினைந்து அவருடன் உண்மை உறவை வைத்து சித்த சுத்தியோடு வாழவேண்டும். அவருக்கே எமது குறைகளையும் நிறைவுகளையும் விண்ணப்பித்து பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இந்த வகையிலே சிறந்த வழிகாட்டியாய் இருந்த பெரிய புராணத்திற்கு மூலமான திருத்தொகையை பாடியருளியவரும் யோகமாகிய சக மார்க்கத்தைக் கடைப் பிடித் தொழுகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், கயிலாய மலையில் பெண்கள் மேல் ஆசைவைத்து மண்ணுலகத்தில் திருநாவலூரில் தோற்ற முன்னும், திருவெண்ணை நல்லூரில் தடுத்தாண்டருளிய பொழுதும் குண்டையூர்க் கிழவரின் நினைவை பூர்த்திசெய்வதற்காக நெல்லைச் சிவபூதங்களைக்கொண்டு திருவாரூரில் நிறைவிக்கச் செய்தபோதும், மணிமுத்தா நதியில் பொன்னை இட்டு திருவாரூக் குளத்தில் எடுத்தபோதும், பரவையார் மாளிக்கு பரவையாந்து கொண்ட ஊடலைத் தீர்ப்பதற்காக பிரமா, விட்டுணு முதலிய தேவர்களாலும், காணமுடியாத சிவபெருமானை அவர்களின் செந்தாமரை போன்ற பாதங்கள் தோயதுடதாக விட்டபோதும், காவேரி ஆற்றின் பெருக்கு திருவையாற்றிற்குப் போக வழி மறித்தபோதும், சங்கிலியாருக்கு செய்த சபதத்தை மீறினதால் கண்மறைந்த போதும், கடலாகிய எம் பெருமானையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூவி அழைத்து தமக்கு அருந்துணையைத் தேடினார். "ஒன்று நீ அல்ல அன்றி ஒன்றில்லை" என்ற மணிவாசகரின் கூற்றின்படி அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற திடசித்தமும் உறுதியாலும் எல்லாப் பேற்றையும் செல்வத்தையும், எல்லாச் சுகத்தையும் ஈபவர் அவரே என்றுணர்ந்தார். உண்மை, ஞானம் கைவரப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள், "ஊடுவது உன்னோடு உவப்பதுமுன்னை" என்பவை நன்கு தெளிந்து அறிந்த மகாஞானி அவர் மாணிக்கவாசக சுவாமிகள் அரசனின் ஏவலை நிறைவேற்ற குதிரைகளைத் தரும்படி சிவபெருமானைக் கேட்டார். வைகை ஆறு பெருக்கெடுக்க வைகையின் பெருக்கை நிறுத்த சிவபெருமானின் உதவியையே வேண்டி நின்றார். வெய்யில் வட்டத்தில் அரசன் ஏவலால் நிறுத்தப் பட்டபோதும், குதிரைகள் நரிகளாக மாறினபோதும், சர்வலோக நாயகனாகிய சிவபெருமானையே வேண்டி நின்றார். ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய சமயாச்சாரியாரிடத்துச் சிறப்பாகவும், நாயன்மார்களிடத்து சிறப்பாகவும் தம் துன்பங்களையும்

வளர்ச்சி 4-ம் பக்கம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 27—12—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மு. மயில்வாகனம்

## காரை நகர்ப் பெரியார்

——0——

காரைநகர், முதுபெரும் பெரியார் திரு. க. தில்லையம்பலம் அவர்கள் சிவபதமடைந்தார். இவர் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினது ஆயுள் அங்கத்தவர்களில் ஒருவராயிருந்தவர். மேற்படி சபையின் நிருவாக சபை அங்கத்தவராயிருந்த காலத்தில் சைவ சமயத் தொண்டுகளுக்கு நிதி உதவி செய்தும் பிறரிடம் நிதிசேர்த்தும் உதவினர். இவரின் மூத்த புதல்வன் மலேஷியாவில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். இளைய புதல்வன் சிங்கப்பூரில் உயர்தர நீதிபதியாகக் கடமையாற்றுகின்றார். இவரின் ஏகபுத்திரி தபால் பகுதியில் உயர்ந்த உத்தியோகத்தை வகிக்கும் திரு. அ. பரசிவன் என்பவரை மணஞ்செய்துள்ளார்.

இவரின் ஆன்மா சாந்தி அடைவதாக.

## அமரத்துவ தினம்

அமரர் குகஸ்ரீ. சண்முக தாச மாப்பாண முதலியார் ( நல்லை. தேவஸ்தான முன்னைநாள் காவலர் ) அவர்களது 10 - ஆவது அமரத்துவ தினம் நல்லை ஆதீனத்தில் 25-12-74 இல் கொண்டாடப்பெற்றது. விசேட பிரார்த்தனை வழிபாடும் குழந்தைகளுக்கு மாகேசுர பூசையும் மாலையில உருவப் பட ஊர்வலமும் மேளவாத்திய சகிதம் ஆதீனத்தில் இருந்து நல்லைக் கந்தன் வீதிவழியாக நிகழ்ந்தது. (ந, நி.)

## இலவசம்

ஈரப்பலாக் கன்று நடுகைக்கு பெற விரும்பும் சங்கங்கள் தகுந்த அத்தாட்சிப் பத்திரம் கொடுத்து யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தாரிடம் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகள் மார்கழி மாதத்தில் என்ன செய்ய வேண்டும்?

அருமைக் குழந்தைகளே!

(1) மார்கழி மாதம் பிறக்கு முன் திருவெம்பாவை பாசுரங்களை மனப்பாடம் செய்யுங்கள். மார்கழி முப்பது நாட்களும அதிகாலையில் நீராடி ஆண்டவனை நினைத்துப் பாடல்களைச சொல்லிக் கொண்டு ஊர்வலம் வாருங்கள்.

(2) திருவெம்பாவையில் ஒரு சில பாடல்களையாவது தெளிவாகவும் அழகாகவும் பாடப் பழகிக்கொள்ளுங்கள்.

(3) குழந்தைகளே! இப்பொழுதே மனப்பாடம் செய்ய ஆரம்பித்தால் தான் மார்கழி மாதம் ஆரம்பத்துக்குள் 'நெட்டுரு' ஆகும்.

(4) மார்கழிக்குள் மனப்பாடம் செய்யுங்கள், மார்கழி நீராடுங்கள், ஊர்வலம் வாருங்கள், தூங்கும் குழந்தைகளையும, பெரியவர்களையும் பாட்டுப் பாடி எழுப்புங்கள்.

ஆயுள் பூரணமாக ஆனந்தமாக வாழுங்கள்.

## திருவாசக விழா

(1ஆம் பக்கத்து வளர்ச்சி)

களுட்படப் பல சைவ அறிஞர்கள் கலந்து கொண்ட விழாவும் செவ்வனே நடைபெற்றது.

நாளை தேர்த் திருவிழா வெகு அழகாக நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பெற்றன. விசேட மங்கல வாத்திய இசையமைப்பு தென்னிந்திய வித்துவான்களால் அளிக்கப்பெறும்.

## திக்கோயாவில்

முத்து விநாயகர்வனராஜா ஸ்ரீ தேவஸ்தானத்தில் 19-12-74 அன்று விசேட அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தபின், திருப்பூங்குடி திரு, ஆறுமுகம் அவர்கள் 'விசார சருமம்' என்னும்பொருளை பற்றி சங்கீத உபந்நியாசம் செய்தனர்.

ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலில திருவெம்பாவைக் காலங்களில், அன்புக்கடல் திருப்பூங்குடி திரு, வி. வி. கே. ஆறுமுகம் அவர்கள் "மாணிக்கவாசகர்" சரித்திரத்தை தொடர்ந்து (பத்து நாட்களும்) கதாப்பிரசங்கம் செய்தனர்.

——

## நடக்க இருக்கும் நற்கருமம்

தேசியப் பேரவையிலே உறுப்பினர்கள் 168 ஆகக்கூடும் என்றும், இதற்கான ஒழுங்கை அரசியல் அமைப்புப் பதினொராம் அதிகாரத்தில் 78 (2) பிரிவில் 57,000 வாக்காளருக்கு ஒரு அங்கத்தவர் என் றிருப்பதைத் 90,000 என மாற்றி அதனை பயனாக உறுப்பினர் தொகையை நிர்ணயம் செய்யப்பெறும் என்றும் செய்தி கூறுகின்றது.

குடிசனத் தொகை பெருமளவுக்குப் பெருகியதால் உறுப்பினர் தொகை 168 ஆக உயரும் என்றும் சொல்லப்படுகின்றது. பேரவை உயரப் பேறும் உயரும்! ——

# மரம் நாட்டு விழா

வடக்கில் அசோக சக்கரவர்த்தியும், தெற்கில் முடியுடை வேந்தராகிய சேரர், சோழர், பாண்டியரும் ஆண்ட காலம் முதலாக நம்மவர் பலவிதமான விழாக்களைக் கொண்டாடி வந்தார்கள். அவை கடற்கரையிலும் ஆற்றோரங்களிலும் காடுகளிலும் திருக்கோயில்களிலும் மலையடிவாரங்களிலும் பலவிதமாக நடைபெற்றன.

பழைய விழாக்களில் வனமகோற்சவம் எனப்படும் மரம் நாட்டு விழாவும் ஒன்று அது நாட்டின் நன்மைக்காகவே நடைபெற்றது. இயற்கையன்னை நமக்களித்துள்ள இணையற்ற செல்வங்களுள் தாவரங்களும் ஒரு பகுதியாகும். தாவரங்கள் என்னும் போது புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகிய சங்கமத்தையே கருதுதல் வேண்டும்.

முற்காலத்தவர் மரம் நாட்டும் விழாவை நடாத்திய வகையை இன்று நாம் கவனிக்கும்போது அது தருமச் செயலாகவும், நாகரீகப் பண்பாகவும் பொருளாதார முயற்சியாகவும் நமக்குத் தோன்றுகிறது. தருமச் செயல்களுள் நிழல் மரம் நடுதல், கேணி, குளந் தோண்டுதல், சுமைதாங்கி அமைத்தல், ஆவுரிஞ்சிக் கல்நடுதல், அம்பலங்கள் சத்திரங்கள் ஆதிய தங்குமடங்கள் அமைத்தல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல் முதலியன அடங்கும்,

முற்காலத்து மன்னர்கள் தங்கள் அரண்மனைகளுக்கு அருகாமையில் நகர்ப் புறத்தில் உபவனம், பூங்கா எனப்படும் தோப்புக்களை அமைத்துப் பரிபாலித்து விளையாட்டயர்ந்து வந்தார்கள். நெடுஞ்சாலை வழியே இருமருங்கிலும் பயன்தரும் மரங்களை நிழலுக்காக நாட்டி நன்மை செய்தார்கள். அதனுல் யாத்திரிகள் யோக்குவரத்துக்கு வசதிகள் இருந்தன. அன்றிப் பறவையினங்கள் தம் விருப்பம போலக் கூடுகட்டியும் வாழ்ந்தன.

### கார்த்திகைப் புராணம்

வனமகோற்சவத்தைப் பற்றியும் அதன் நன்மையைப் பற்றியும் அதனுல் உண்டாகும் பயனைப் பற்றியும் கார்த்திகைப் புராணத்தில் ஒரு செய்யுள் நயம்படக் கூறுகிறது. கார்த்திகை மாதத்து வளர்பிறைக் காலத்தில் ஓர் அரசு, ஓர் ஆல், ஒரு வேம்பு, மூன்று விளா, மூன்று வில்வம், மூன்று நெல்லி, பத்துப் புளி, ஐந்து மா, ஐந்து தென்னை ஆகிய ஒன்பது வகையான மரங்களையும் நாட்டுபவர்களுக்கு நரக வேதனை இல்லை என்று புராணம் கூறுகிறது.

மரம் நாட்டு விழாவைப் பற்றி தமிழ்ப் பெரியார் பரலி சு. நெல்லையப்பர் பாடியவை

மரம் செடி கொடிகள்
வளர்த்திடுவோம்
மக்கள் வாழ்வு
வளர்த்திடுவோம்
நிரந்தரமாகக் காத்திடு வோம்
நிறைவாழ் வுலகில்
வாழ்ந்திடுவோம்

ஆல் அரசு வேம்பு
வளர்த்திடுவோம்
அழகிய மரங்கள்
வளர்த்திடுவோம்
மேலாம் மரங்கள்
வளர்த்திடுவோம்
மேதினி வாழ்வு
வளர்த்திடுவோம்

ஊரெங்கும் மரங்கள்
வளர்த்திடுவோம்
உயரிய மரங்கள்
வளர்த்திடுவோம்
பாரெங்கும் மரங்கள்
வளர்த்திடுவோம்
பலன்தரு மரங்கள்
வளர்த்திடுவோம்.

மா பலா கொய்யா
வளர்த்திடுவோம்
வாழை தென்னை புளி
வளர்த்திடுவோம்
பூகமுகும் கரும்பும்
வளர்த்திடுவோம்
புண்ணிய நெல்லி
வளர்த்திடுவோம்

பூஞ்செடி கொடிகள்
வளர்த்திடுவோம்
பூமியை அழகாய்ச
செய்திடுவோம்
வாஞ்சையாய் மரங்கள்
வளர்த்திடுவோம்
வாழ்வு பெருகச
செய்திடுவோம்.

சாலையில் மரங்கள்
வளர்த்திடுவோம்
தண்ணிழல் மரங்கள்
வளர்த்திடுவோம்
சோலையும் குளமும்
பெருக்கிடுவோம்
சுகவாழ் வுலகில்
பெருக்கிடுவோம்.

ஏரிகுளங்கள் பெருக்கிடுவோம்
எங்கும் சோலைகள்
வளர்த்திடுவோம்
மாரி நீரை வீணுக்காமல
வற்றுக் குளங்கள்
ஆக்கிடுவோம்

காடும் வனமும்
பெருக்கிடுவோம்
கார் மிகப் பொழியச்
செய்திடுவோம்
நாடு செழிக்கச்
செய்திடுவோம்
நாதனைத் தொழுது
வாழ்த்திடுவோம்.

யோன் மொறிஸ் என்னும் அமெரிக்கர் தம் இளமைக் காலத்தில் ஒரு பெரிய மர நிழலில் அமர்ந்து படித்தும் விளையாடியும் அம்மரத்தோடு நன்கு பழகியவர். அவர் வளர்ந்து பெரிய புலவராய் இருந்த காலத்தில் அம் மரத்தின் சொந்தக்காரன் அதனை ஒரு விறகு வெட்டிக்கு விற்றதால் அவன் அதனைத் தறிப்பதற்கு ஆயத்தமாகக் கோடரியைத் தீட்டினுன். அதைக் கண்டு பதைபதைத்த புலவர் கண்ணீர் விட்டுப்புலம்பியழுது, விறகு வெட்டிக்கு வேண்டியளவு பொருள் கொடுத்து அதனை வெட்டவிடாமல் தடுத்து நெஞ்சை உருக்கும் பாடல்களையும் பாடினுர்.

நாம் எத்தனையோ விழாக்களையும் வாரங்களையும் ஆண்டு தோறும் கொண்டாடுகிறோம். சில விழாக்களில் ஆடம்பரமாகச் செலவிட்டுப் பணப்பையின் பாரத்தைக் குறைத்துக் கவலைப்படுகிறோம். இனிமேல் மரம் நாட்டு வாரம் என்றொரு வாரத்தைக் கொண்டாடி வளத்தைப் பெருக்குவோமாக.

——

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

(2ஆம் பக்க வளர்ச்சி)

இயமானனும் விமலா! வேள்வித் தலைவனுகக் காணப்படுந் தூயோய்! வேள்வித் தலைவன் தீவினையொழிந்த செவ்வியனுலின் அவனைத் தூயனென்றுர். என்றது உணர்தற்கெடுத்துக் காட்டு,

இறைவன் ஓங்கி யாழ்ந்தகன்று நுணுகியிருத்தலைத் தம்முணர்விற் கண்டுவழிபடலாற்ருதார் அவனைப் புறத்துக்கண்டு வழிபடுமிடமாவன வெய்யோனுந் தண்ணியோனும் வேட்போனுமாதல் கூறப்பட்டது. யாண்டுமொப்பக் கலந்திருக்குமியல்புடையான் இம்மூன்றிடங்களின் மிக்குத்தோன்றுதலின் உடலுயிரொற்றுமை வழக்குப் பற்றி அவ்விடங்களை அவனென்றுர். இம்மூவிடனேடு ஐம்பெரும் பூதமுங்கூட்டி இவை இறையெண் பிழம்பென விளங்குப.

பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே.

உரை: உள்ளம் உடம்பு ஞாலமெல்லாம் உண்பொருள் போலத் தோன்றி இப்பொருளாயினவாய் மீளாது நீங்குமாறு எழுந்தருளி வந்து மெய்யுணர்வே பிழம்பாகி ஒளிவிடுகின்ற உண்மையென்னும் ஒளியே!

எல்லாம் பொய்யாயினவாயென முற்றெச்செமாக்குக. இனிப் பொய்யாயினவெல்லாம் பொய்யெயாயொழி-வென மாறுரைத்தலுமொன்று: போயகலவென்பது குழிந்தாழ்ந்தவென்றூற் போலுமொரு பொருட்பன்மொழி மீளாது நீங்கவென்பது கருத்து,

(வளரும்)

## நாவலர் பிள்ளைத்தமிழ்

[எட்டாவது : சிற்றிற் பருவம்.]

ஆக்கம் : — "பழைய பாணி" —

(முன் வளர்ச்சி — 63)

நெற்றி வியர்வைத் துளிநிரைப்ப
நீரார் குதலைச் சாரெழுக
நிகரில் சாண நறுமணமும்
நிறைபூ மணமும் பரிமளிக்கும்
முற்றத் தினிற்கற் றெடர்நிரைத்து
மூலத் தானம் முதலாக
முதியோ ரியற்றும் பாவனையின்
முயன்ற நீசெய் சிறுகோயில்
சற்றே பிறர்கால் பட்டிடறில்
தரையிற் புரண்டு தவித்தழும்சீ
தமியேஞ் சிற்றி லழிப்பதென்னே
தமக்கிங் கொன்று பிறர்க்கொன்றோ
செற்ற முனக்கென் னெம்மோடு
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெய்வத் திருவார் சிவகாமி
செல்வா சிற்றில் சிதையேலே. (4)

நல்லைக் கீர்த்தனை

## உன்னை நினைந்தறியேன்!

["இயலிசைவாரிதி" யாழ்ப்பாணம் ந. வீரமணி ஐயர்]

இராகம் : சாமா :: தாளம் : ஆதி

பல்லவி

மறந்தறியேன் உன்னை நினைந்தறியேன் (முருகா)
சிறந்த செவ்வே லேந்தும் சேந்தனே ஷண்முகனே

அநுபல்லவி

கறந்தபால் கன்னலும் கனிரஸமும் தமிழும்
நிறைந்தவுன் அருள்சுவை நிகராகுமோ குமரா

சரணம்

வாரிவாரி அருளை வழங்கிடும் தியாகமூர்த்தி
கூரிதழ் ஞானவேல் கொண்டிடும் நின்கீர்த்தி
ஊரில் திகழ்நல்லை உயர்ந்துவாழும் சீர்த்தி
ஆரீடம் செல்வேனையா அடிமலர் தரும்பூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஞூ மார்கழி மீ ௧௨ உ வெள்ளி

## ஆலயங்கள் ஆலயங்களாக அமைந்தால்!

வேத சிவாகம விதி முறைப்படியே எம் மூதாதைகள் சைவாலயங்களை நிறுவினர்கள். நித்திய நைமித்திய ஒழுங்குகளை நேர் சீராக அமைத்தனர். ஆசாரியர்கள் அத் தகுதிக்குரிய அபிடேகம் உடையவர்களாய் தீக்ஷைப் பேறும் உள்ளவர்களாய் ஆன்மார்த்த பூசை செய்த பின்பு பரார்த்தப் பூசை புரிவாராயிருந்தனர். வழிபடுவோரும் இவ்வழி நின்று பரிசுத்தராகும் வாய்ப்புப் பெற்றனர். எங்கும் இறைமயமாய் இலங்கியது. ஊரில் உண்மை உணர்ச்சி உண்டாகி மக்கள் மனிதப் பண்புடையவர்களாய் வாழ்வாங்கு வாழ்ந்தனர். மாதம் மும்மாரி பொழிந்தது. மன்னவன் செங்கோல் செலுத்தினன். பஞ்சமும் பிணியும் அறியார் ஊரவர்கள். நோயின்றி வாழ்ந்து நுண் மாண் நுழைபுல நலம் எய்தினர். இவையெல்லாம் அக்காலத்தில்.

இக்காலத்திலோ இவை யாவும் இன்றென்றே கூறவேண்டியிருக்கின்றது. இந்நிலைமைக்கு யாதுதான் ஏதோ என்றால்,

**முன்னவன் கோயிற் பூசைகள் முட்டிடப்பெற்றன என்றே அநுமானிக்க வேண்டும்.**

வாரி வளங்குன்றிக் கன்னல் களவு மிகுத்திருக்கும் இவ்வேளையில் சமயாபிமானிகள் தங்கள் கடமையை ஆற்ற முன்வருதல் அத்தியாவசியம்.

ஆலயங்கள் அணிபெற அமைவதற்கு அவற்றுக்குரியனவாய் முன்னுள்ளோர் முறைப்படி தருமசாதனமாக வழங்கிய நிலம்புலம் நிதி என்பன ஏராளமாகவுண்டு. இவற்றையெல்லாம் நெறிபெற நிர்வகிக்காது தவறுகள் பல நிகழ்ந்து விட்டனவென்று நீதி மன்றங்களே எடுத்துக் காட்டியிருக்கின்றன. பொது மக்களும் புகன்றவண்ணம் உள்ளனர்.

சிவ சொத்து அவமாவதைப் பார்த்து வாளாவிருப்பதுவும் சிவத் துரோகமாகும், அதி பாதகமாகும் என்றெல்லாம் நாவலர்பெருமான் எழுதி உணர்த்திய நூல்கள்மூலம் நன்கறிந்திருக்கின்றோம் நாம். இருந்தும் ஆலயங்கள் ஆலயங்களாக அமையாத நிலைமையை அவதானித்தும காலத்தை அவமே கழிக்கின்றோமல்லவா? பொருளாதாரப் பொலிவின்மைக்கு ஒரு பெருங்காரணம் தருமம் அருகி அதர்மம் பெருகுவதே. எனவே சைவத் திருநெறி பிறழாது பெருந்தொண்டாற்றி வரும் சபைகள், சங்கங்கள், மன்றங்கள் யாவும் இப்பெரும் பிழையை இல்லாதொழிக்க இறைவன் நாமத்தினால் விரத உறுதிபூண்டு தொண்டாற்றுதல் ஒன்றே விமோசனத்துக்குரிய வழியாகும் என்று நாம் எண்ணுகின்றோம்.

## ஐயடிகள் காடவர்கோன் நாயனர்

(1ஆம் பக்கத்து வளர்ச்சி)

காடவர்கோன் கழற்சிங்கன் என்றார்.

மணம் பொருந்திய கொன்றைமலர் மாலையை யணிந்த பேரொளிப்பிழம்பாகிய சிவபெருமானுக்குத் தொண்டுசெய்து ஊர்தோறும் கையில் ஓட்டினை ஏந்திப் பிச்சையேற்று உண்டுவாழும் தொண்டர் வாழ்வே, இவ்வுலக முழுவதனையும் தமது வெண்கொற்றக்குடை நிழற்கீழ் அடக்கி ஆளும் முடிவேந்தர் வாழ்க்கையைக் காட்டிலும் மும்மடங்கு சிறந்தது என்னும் உண்மையினைத் தமது அருள் அனுபவத்தால் உணர்ந்து உலகத்தார்க்கு உணர்த்தியவர் ஐயடிகள் காடவர்கோன் நாயனர் ஆவர். இச்செய்தி,

"படிமுழுதும் வெண்குடைக்
கீழ்ப்பாரெலாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து
மும்மை — கடியிலந்
தோடேந்து கொன்றையந்தார்ச்
சோதிக்குத் தொண்டுபட்
டோடேந்தி யுண்பதுறும்".

என இவர் அருளிய திருவெண்பாவால் இனிது விளங்கும். இவரைப் 'பக்திக் கடல் ஐயடிகளாகின்ற நம் பல்லவனே' [illegible]

ௐ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

போற்றி யருளுகநின்
ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின்
அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந்
தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும்
ஈறாம் இணையடிகள்
போற்றிமா லுன்முகனுங்
காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட்
கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ
ராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

## சிதம்பர நடராஜ தரிசன இரகசியம்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

லானந்த சின்மய தாண்டவ வடிவமும், ஏனைய கோயில்களிலுள்ள நடராஜ வடிவங்கள் போக மோக்ஷப் பிரதமான கௌரீ தாண்டவ வடிவமும் ஆகும். சிதம்பர தல வழிபாட்டில் அருவவழிபாடாகிய நிஷ்கள சொருப சிதாகாச ரஹஸ்ய தரிசனமே முக்கியமானது. ஏனைய இடங்களில் சகள வடிவாகிய உருவ நடராஜ வழிபாடே நடக்கிறது. சாதாரண மக்கள் செய்யும் நடேச தர்சனம் இதுவே.

பொன்பூத்த மணிமன்று
ளானந்த நடங்காணப்
புகுவோர்க்கிந்தக்
கொன்பூத்த குஞ்சித மென்பாத
தரிசனத்தின்னே கூடுமுத்தி
மென்பூத்த பிறமுயற்சி
வேண்டலெனுங்
குறிவரதாபயத்தின் மேவ
நன்பூத்து நடங்குனிக்கும்
பெருவாழ்வைப்
பணிந்தேத்தி
வாழ்வாமன்றே

— ஸ்ரீ சபாபதி நாவலர்
சிதம்பர சபாநாத புராணம்

புளிக்கண்டவர்க்குப்
புனலூறுமாபோற்
களிக்கும் திருக்கூத்துக்
கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர்
சோர் நெஞ்சுருகும்
ஒளிக்கு ளானந்தத்
தமுதூறும் உள்ளத்தே.

அண்டத்தில் தேவர்கள்
அப்பாலைத் தேவர்கள்
தெண்டிரை சூழ்புவிக்
குள்ளுள்ள தேவர்கள்
புண்டரிகப் பதப்
பொன்னம் பலக்கூத்துக்
கண்டு சேவித்துக்
கதி பெறுவார்களே

— திருமந்திரம்

ௐ

## நம்பனின் அருளினில் வாழி!


சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்

[யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் 80-ஆவது அகில இலங்கைச் சைவ மாநாடு 1968ஆம் ஆண்டு நடைபெற்றதொன்று; அம் மாநாட்டுக்கு தலைமை தாங்கிச் சிறப்பித்த, சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களுக்கு **6-1-1975** அன்று மணி விழா தேவகோட்டையில் நிகழவிருப்பதை யறிந்து வாழ்த்துகிறோம். ப—ர்]

வித்துவான் க. சொக்கலிங்கம் [சொக்கன்] பி. ஏ.
(தலைவர், யாழ். நாயன்மார்கட்டு, சைவசமய அபிவிருத்திக் கழகம்)

அரியதா மனிதப் பிறவியை யடைந்தார்
அவலமா மாணவ முனைப்பை
இரியவே முயல விலக்கெனக் கொள்ளா
திகத்தினிற் பற்றுமீக் குற்றுத்
திரியவுங்கண்டு கருணையா லவரின்
தீநெறி விலக்குதல் குறித்த
பெரியவர் சிலருட் பிறங்கிய புகழோய்!
பேசுதத் புருட்டே சிகனே! (1)

அஞ்சுதல் அறியாய் கெஞ்சுதல் தெரியாய்
அமலனின் செம்மலர் நோன்றாள்
தஞ்சமே யாகத் தானெனு முனைப்பைத்
தடுத்திடு முயற்சிமேற் கொள்வாய்
விஞ்சிடு ஞான விளக்கினை யேற்றி
வெந்துயர்ப் பாசமா மிருளைக்
கொஞ்சமே யாக வலிகெடுத் திடுவை
குலவுதத் புருடதே சிகனே! (2)

எண்பதிற் றுண்டின் மேலதா யெங்க
ளீழத்திற் சைவநன் னெறியைக்
கண்ணெனப் போற்றிப் பாலனஞ் செய்து
கதியினைக் காட்டிடுஞ் சிறந்த
பண்புறுஞ் **சைவ பாலன சபையார்**
பாங்குற வறுபதெட் டாண்டி
லெண்ணுற வெடுத்த மாநாட்டுத் தலைவ!
இலகுதத் புருடதே சிகனே.! (3)

(சைவ பாலன சபை — சைவ பரிபாலன சபை)

இத்துணைச் சிறப்பு மித்துணைத் திறனு
மித்துணை ஞானமு மொருங்கே
யெத்துணைப் பிறப்பை யெய்தியு மடைதற்
கியலுமோ வெனவயிர்த் திடுவோம்
அத்துணைப் பெருமை யமைந்திடு முன்னை
யகத்தினில் வணங்கியே யாங்கள்
நற்றுணை யாக நயந்தனங் குருவே
நம்பனி னருளினில் வாழி! (4)

நீரைத் தேக்கி நிலத்தை வளஞ்செய்

## உலகத் தமிழ் நூலகம்

உலகத் தமிழ் நூலகம் ஒன்றை இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் நிறுவியுள்ளார் இந் நூலகத்தில் உலக நாடுகள் அனைத்திலும் வெளியான தமிழ்தொடர்பான நூல்கள் இடம்பெற்றுள்ளன.

## ஊடுவ துன்றேடு

2-ஆம் பக்கத்து வளர்ச்சி

தடைப்பதற்கும், பேரின்பத்தைப் பெறுவதற்கும் இறைவனின் துணையையே தேடினார்கள்,

(வளரும்)

## தானவரவு

மேலைப்புலோலி திரு. சி. நா. சொக்கநாதபிள்ளை அவர்களின் பிதா திரு. நாகலிங்க பிள்ளை 9-10-74 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் அந்தியக் கிரியையின் போது சைவ பரிபாலன சபைக்குத் தானமாக அனுப்பிய ரூபா 5-00 பெற்றுக் கொண்டோம்.

## அன்னதானம்

காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினர் ஈழத்துச் சிதம்பரம் திருவெம்பாவை தேர்த் திருவிழாவாகிய நாளை அன்னதானம் வழங்கவுள்ளனர்,

## தமிழ் ஆராய்ச்சி

வட்டுக்கோட்டைச் தமிழ்ச் சங்கத்தினருக்கு பொன்னாலையில் பத்துப் பரப்புக் காணி இலவசமாகக்கிடைத்துள்ளது. இந்நில் கட்டிடம் அமைத்து தமிழ் ஆராய்ச்சி நடத்த சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

**விநாயகர் ஆலயம்**

—0—

பழம்பெரும் கிண்ணியாதுறை விநாயகர் ஆலயத்தை சீர்படுத்துவதற்கு இந்துக்கள் அனைவரும் முன்வர வேண்டுமென்று கிண்ணியா இந்து ஆலய பரிபாலன சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org